DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 464/2024

Miscellaneous :

Sessions : DW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ரவி |
| Father / Husband Name | ராமலிங்கம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 25.09.2025

**குறுக்கு விசாரணை:**

1. நான் B.A. Literature படித்துள்ளேன். நான் மதுராந்தகம் பகுதியில் சுமார் 5 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். நான் என்ன பெயரில் நிதி நிறுவனம் நடத்தினேன் என்றால் என்னுடைய பெயரில் தான் நடத்தினேன். என் பெயர் நிறுவனத்தின் பெயர் பலகையில் வைத்திருந்தேன் என்றால் இல்லை, பைனான்ஸ் புக், விசிடிங் கார்ட் ஆகியவை வைத்திருந்தேனா என்றால் இல்லை. என்னுடைய அரசு அனுமதி எண் என்ன என்றால் 46/1993. அதை 2018 லிருந்து 2021 வரை புதுபித்தேன். அதன்பிறகு புதுபிக்கவில்லை. தற்போது சிவன்அருள் டிரேடர்ஸ் என்ற பெயரில் எண்ணெய் வியாபாரம் செய்துவருகிறேன். புகார்தாரர் 25.04.2020 ல் என்னிடம் மாதச்சீட்டில் சேர்ந்தார். மேற்படி சீட்டிற்கு அரசு அனுமதி பெற்றேனா என்றால் இல்லை. நான் நடத்திய சீட்டில் புகார்தாரர் போக மற்ற 9 நபர்களின் பெயர் என்ன என்றால் தாமோதரன், லட்சுமி, கவிதா, ஜெகன் மற்றவர்களின் பெயர் ஞாபகமில்லை. அந்த மாதாந்திர சீட்டிற்கு ரசீதோ, அட்டையோ உள்ளதா என்றால் இல்லை. அந்த மாதாந்திர சீட்டிற்கு பெயர் இல்லை.

2. நான் இதுபோல் 4 சீட்டுகள் நடத்திவருகிறேன். அந்த 4 சீட்டும் ஒரே நேரத்தில் நடத்தினேன் என்றால் சரிதான், ஆனால் தேதிகள் மாறும். அந்த தேதிகள் ஒவ்வொரு மாதமும் 5,10,15,20 ஆகிய தேதிகளில் நடத்தினேன். என்னிடம் சீட்டில் சேர்ந்தவர்கள் யார் யார் பணத்தை சரியாக கட்டவில்லை என்றால் 5 வருடம் ஆனதால் எனக்கு ஞாபகமில்லை. அவர்கள் அனைவரும் பணத்தை செலுத்திவிட்டார்களா என்றால் செலுத்திவிட்டார்கள், ஆனால் காலதாமதமாக செலுத்தினார்கள். சுமார் 3 மாதம் முதல் 6 மாதத்திற்குள் செலுத்தினார்கள். நான் வெளியில் பணம் வட்டிக்கு விடுகிறேன் என்றால் சரிதான். அதற்கு நான் அரசு அனுமதி பெற்றுள்ளேன். அப்போது நான் வீட்டிலேயே நிதி நிறுவனம் நடத்தினேன். 2021 ஏப்ரலில் நிதி நிறுவனத்தை நிறுத்திவிட்டேன் என்றால் சரிதான்.

3. புகார்தாரர் 2021 ஜனவரி மாதம் 25ம் தேதி சீட்டு முடிந்தது, அவர் கடைசி சீட்டை எடுத்தார். புகார்தாரருக்கு நான் கடைசி சீட்டு தொகை ரூபாய் 3 லட்சம்

தரவேண்டும் என்றால் அவர் கட்டவேண்டிய தொகை சேர்த்து ரூபாய் 3 லட்சம் தரவேண்டும். புகார்தாரர் சேர்ந்த சீட்டு 25ம் தேதி நடந்த சீட்டு. புகார்தாரர் எனக்கு சீட்டு தொகையை ரொக்கமாக கையில் தான் செலுத்துவார். அந்த சீட்டு தொகை பெற்றுக்கொண்டதற்கு ரசீது வழங்குவேனா என்றால் இல்லை, நானும் எழுதிவைத்துக்கொள்ளவில்லை. நான் சொல்வதுபோல் சீட்டை நடத்தவில்லை என்றாலும், அவ்வாறு நடத்தியிருந்தால் அதற்கு நான் முறையாக ஆவணங்கள் பராமரித்திருப்பேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சீட்டு நடத்தியிருந்தால் நான் சீட்டில் சேர்ந்த நபர்களின் பெயரை சொல்லியிருப்பேன் என்றாலும், நான் சீட்டு நடத்தியதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. நான் புகார்தாரருக்கு ரொக்கமாக எவ்வளவு ரூபாய் கொடுத்தேன் என்றால் 8 முறை இணையதளம் வழியாகவும், மற்ற தொகை அனைத்தும் ரொக்கமாக கொடுத்தேன், எவ்வளவு தொகை கொடுத்தேன் என்று ஞாபகமில்லை பார்த்து தான் சொல்லமுடியும். இணையதளம் வழியாக தலா 14 ஆயிரம் என 8 முறை அனுப்பியுள்ளேன். எனக்கும் புகார்தாரருக்கும் சுமார் 10 ஆண்டுகள் பழக்கம். இந்த சீட்டு இல்லாமல் எனக்கும் அவருக்கும் இடையே வேறு பரிவர்த்தனை உள்ளதா என்றால் இல்லை. இதற்கு முன்பே எனக்கும் அவருக்கும் பரிவர்த்தனை இருந்தது என்றாலும், அந்த பரிவர்த்தனைக்காக தான் இணையதளம் மூலம் பணம் அனுப்பினேன் என்றாலும் சரியல்ல. நான் 12 தவனை ரொக்கமாக கொடுத்தேன் அதற்கு சாட்சி உள்ளதா என்றால் எழுத்துபூர்வமாகவும் இல்லை ஆள் சாட்சியும் இல்லை. உண்மையிலேயே நான் ரொக்கமாக கொடுத்திருந்தால் அதற்கு ஆவணங்கள் எழுதிவாங்கியிருப்பேன் என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. வழக்கு காசோலையை நான் 2021 ம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ம் தேதி என்னுடைய அலுவலகத்தில் வைத்து புகார்தாரருக்கு கொடுத்தேன். என்னிடம் வழக்கு காசோலை என்னுடைய தான், அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த காசோலையை நான் புகார்தாரரிடம் கொடுத்ததற்கு சாட்சி ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. நான் 25.02.2022 ம் தேதி காசோலை கொடுத்ததாக முதல் விசாரணையில் சொல்லியிருந்தால் அது தவறா என்றால் தேதி தவறாக உள்ளது. நான் முதல் விசாரணையை படித்துபார்த்து தான் தாக்கல் செய்தேன். நான் காசோலையை எப்போது திருப்பி கேட்டேன் என்றால் 2023 ம் வருடம் அக்டோபர், நவம்பர் மாதத்தில் கடைசி தவனையை திரும்ப செலுத்தி காசோலையை கேட்டேன்.

6. காசோலையை திரும்ப தரவில்லை என சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. யார் கட்டப்பஞ்சாயத்து செய்தார் என்றால் எனக்கு தெரிந்தவர்கள் இல்லை புகார்தாரருக்கு தெரிந்தவர்கள். அவர்கள் 14 முதல் 15 பேர் இருந்தார்கள். அரசியல் பிரமுகர் என்றால் சாமிநாதன் ஆவார். வேறு யாரு பெயரும் எனக்கு தெரியவில்லை. இது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் யாராவது என்னை மிரட்டியிருந்தால் நான் சட்ட நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றாலும், நான் என்னை மிரட்டியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 12.07.2024 அன்று சாமிநாதன் உடன் யார் யார் வந்தார்கள் என்றால் அவரை மட்டும் தான் அடையாளம் தெரியும், மற்ற 15 நபர்களை எனக்கு அடையாளம் தெரியாது. சாமிநாதன் எந்த அரசியல் கட்சியை சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது.

7. சாமிநாதன் என்னை மிரட்டியது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. அவ்வாறு நான் சொல்வது போல் உண்மையிலேயே நடந்திருந்தால்

நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும், நான் சம்பவத்தை மிகைப்படுத்தி கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. எந்த தேதியில் 100 ரூபாய் முத்திரை தாள் வாங்கப்பட்டது என்றால் அது தெரியவில்லை. என்னிடம் 12ம் தேதி கையெழுத்து வாங்கினார்கள். எத்தனை தாளில் கையெழுத்து வாங்கப்பட்டது என்றால் 2 பச்சை தாளில் வாங்கப்பட்டது. நான் வீடியோ ஆதாரத்தை தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

**மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**